# கம்பராமாயணம்

இந்நூல் தேரழுந்தூரில் வாழ்ந்த கம்பரால் 6 காண்டங்களும் 118 படலங்களும் 10500 பாடல்களை மாக சடையப்ப வள்ளல் உதவியுடன் 15 நாட்களில் எழுதப்பட்டு திருவரங்கத்தில் அரங்கேற்றப்பட்ட பெற்ற காப்பியம் ஆகும்.

தசரதனின் மைந்தனான இராமன் மந்தரையின் சூழ்ச்சியால் ஏழிரண்டு ஆண்டுகள் மரவுரி தரித்து கான் ஆள நேர்ந்தது. அப்பொழுது சிருங்கிபேரத்தின் தலைவனும் ஆயிரம் அம்பிகளுக்கு தலைவனும் கார் போன்ற நிறத்தை உடையவனும் மலையைப் போன்ற தோள்களை உடையவனும் ஆன குகனும் இராமன் நட்பு கொள்கிறார்.

குகன் இராமனுக்கு தேனும், மீனும் உணவைக் கொடுத்து இரவு முழுவதும் கண்களை இமை காப்பது போல மூவருக்கும் காவல் புரிந்து நின்றான் பின்பு காலையில் இராமன் தன் மனைவி மற்றும் தம்பியுடன் விடைபெற இருந்த போது இராமன் மற்றும் தம்பியுடன் இராமன் மீது கொண்ட பற்றால் குகன் இராமனை தன் நகரிலேயே இருந்து ஆட்சி புரியுமாறும் தங்களைவிட்டு பிரிந்து செல்ல வேண்டாம் என்றும் கண்களில் கண்ணீர் மல்க நின்றான் அப்போது இராமன் குகனைத் தழுவி இன்றுடன் உன்னுடன் சேர்த்து சகோதரர்கள் ஐவரானோம் என்று கூறினார். மேலும் நாம் வனத்தில் இருந்து திரும்பி வரும் போது திரும்ப

சிருங்கிபேரம் வருவோம் என்று வாக்கு அளித்து விட்டு சித்திரக்கூடம் செல்லும் வழியைக் கேட்டறிந்து விடைபெற்றுக் கொண்டனர். குகன் அவர்கள் மூவரும் தன் கண்ணிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தான்.

அவரை பார்த்துக் கொண்டிருந்தான்.

## பெரியபுராணம்

இந்நூல் அருள்மொழித்தேவரால் 12ஆம் நூற்றாண்டில் 63 நாயன்மார்களின் வரலாற்றினையும் கூறும் பெயற்ற நூலாக 2 காண்டங்களும் 13 சருக்கங்களும் கொண்டு சுந்தரரின் திருத்தொண்டர் தொகையைத் தழுவி திருத்தொண்டர் புராணம் என்று சேக்கிழாரால் இயற்றப்பட்ட பெயற்ற காப்பியம் ஆகும்.

சேய்ஞலூரில் எச்சதத்தன் என்பவருக்கு மகனாகப் பிறந்த விசாரசருமர் தன் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த போது ஒருவன் ஆவினை அடிக்க அதைக்கண்ட விசாரசருமர் அன்று முதல் தான் நிரை மேய்ப்பதாக கூறினார்

அன்று முதல் நிரை மேய்த்து வந்த அவர் மண்ணால் சிவலிங்கம் செய்து பால் கொண்டு அபிஷேகம் செய்து வந்தார். இதனைக் கண்ட சிலர் எச்சதத்தனிடம் சென்று தெரிவித்தனர். இதைக்கேட்டு மிகுந்த கோபம் கொண்ட அவர் அங்கு சென்று சிவலிங்கத்தைத் தன் காலால் எட்டி உதைத்தார்.

இதனைக் கண்டு கோபம் கொண்ட விசாரசருமர் அங்குக் கிடந்த கட்டையை வீச அது மழுவாக மாறி எச்சதத்தன் காலை வெட்டியது. அப்பொழுது சிவபெருமான் தோன்றி தன் தலையில் உள்ள கொன்றை மாலையை விசாரசருமருக்குச் சூட்டி அவருக்கு சண்டேசர் பதவி அருளினார்.